Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 63** கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக; உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும் சங்.119:169 ஜனவரி 2017 No.1

## கிறிஸ்துவில் நமக்கான சிங்காசன உரிமைகள்

**Our throne rights in Christ**
Sarah Foulkes Moore

நமது ஆண்டவர் அனைத்து அதிகாரங்களுக்கும், வல்லமைகளுக்கும், சத்துவத்திற்கும் ஆட்சிக்கும் மேலான தலைவர். அவரது பெயர் இவ்வுலகிலும் வரப்போகிற உலகிலும் எல்லாவற்றிற்கும் மேலானது. அவரது நிலையும், வல்லமையும் எல்லாவற்றிற்கும் மேலானது. உயிர்த்தெழுந்த ஆண்டவர் மகா உன்னதங்களிலே தேவனுடைய வலது பாரிசத்தில் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டு ஆட்சி செய்கிறார். இந்த இருண்ட உலகத்தை அடக்கி ஆளுவதற்காக முயற்சிக்கும் எல்லா வல்லமைகளுக்கும் மேலான வல்லமை அவருடையது எபே.1:20.

கிறிஸ்து இயேசுவின் மூலம் தமது அளவற்ற கிருபையின் ஐசுவரியத்தால் பிதாவானவர் 'நம்மை எழுப்பி உயிர்த்தெழுந்த ஆண்டவரோடு பரலோக வாசஸ்தலங்களில் அவரோடு உட்காரச் செய்தார்' எபே.2:5-7. எனவே தேவ கிருபையால் அனைத்து விசுவாசிகளும் தேவனுடைய வலது பாரிசத்தில் உயர்த்தப்பட்டு கர்த்தருடைய சிங்காசனத்தின் பங்காளிகளாகிறார்கள்.

சாத்தானின் வல்லமைகள் ஒன்றாக இணைந்து கிறிஸ்துவின் சபைக்கு எதிராக நிற்கும் இந்நேரத்தில், விசுவாசிகள் தாழ்மையுடன் தேவனைத் தேடுவது அவசியம். அவர்கள் கிறிஸ்துவின் வலது பாரிசத்தில் உன்னதங்களில் தங்கள் இருக்கையை சொந்தமாக்கிக் கொண்டு, வானமண்டலத்தின் அதிகாரங்களுக்கு மேலான அதிகாரத்தைக் கொண்டு விசுவாசத்தாலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தின் வல்லமையாலும் எல்லாவற்றையும் கீழ்ப்படுத்த முடியும்.

### அனைத்து விசுவாசிகளுக்கும் வாய்ப்பும் அதிகாரமுமுண்டு

கொலோ.2:15-ன் படி கிறிஸ்து சகல துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் அழித்து விட்டார். எனவே விசுவாசிகள் அனைவரும் இந்த கல்வாரியின் பலத்த வெற்றியை முழுமையாகப் பகிர்ந்து கொள்ள முடியும். தீமையின் சத்துவங்களுக்கு மேலாக அதிகாரமுள்ள இயேசு தமது அதிகாரத்தைத் தனது சீஷர்களுக்கு அளித்தார்; "இதோ . . . . சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது" லூக்.10:19 என்று இயேசு கூறினார்.

கிறிஸ்துவில் சிங்காசனத்தின் உரிமைகளை அறிந்து கொண்ட விசுவாசிகள் அந்த அதிகாரத்தை சொந்தமாக்கிக் கொள்ளும் போது சத்துருவின் வல்லமையை விட தங்களது வல்லமை பெரிது என்பதை அறிந்து கொள்வார்கள். அப்போது சத்துருவின் வல்லமைகள் விசுவாசிக்குக் கீழ்ப்படியக் கட்டாயப் படுத்தப்படும்.

சிலுவை சாத்தானுடைய வல்லமையை எடுத்து விட்டது. அவனை மேற்கொள்ள ஒவ்வொரு தாக்குதலிலும் இயேசுவின் இரத்தத்தை பயன் படுத்த வேண்டும். அந்தத் தாக்குதல் சபை மீதோ குடும்பத்தின் மீதோ, மனதிலோ, ஆத்துமாவிலோ, சரீரத்திலோ, சூழ்நிலைகளிலோ ஏற்பட்டாலும் இதுவே நிவாரணம். ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் சாத்தான் தோற்கடிக்கப்பட்டவன் வெளி.12:11. இயேசுவின் இரத்தத்தால் அவனைக் கட்டும்போது அவனுடைய சகல அதிகாரமும் உரிந்து கொள்ளப்படும்.

சத்துருவின் மேலுள்ள அதிகாரத்தின் இருப்பிடம் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்திலிருக்கிறது. அது விசுவாசியின் பாதுகாவல் (எபி.1:15-23; 2:1-6) விசுவாசத்தின் மூலம் தேவனிடம் உங்கள் இருதயத்தின் சகல பகுதிகளையும் இயேசுவின் இரத்தத்தால் மூடி மறைக்கும்படி கேளுங்கள். பின்பு "இயேசுவின் இரத்தம் இப்பொழுதே எனது சகல பகுதிகளையும் பாதுகாப்பதோடு, இப்பொழுதே தீமையின் அதிகாரங்கள் அனைத்தையும் முற்றிலுமாக அழிக்கிறது" என்று சத்தமாகக் கூறுங்கள். ஒரு நிச்சயமானதும் உறுதியானதுமான நிலைக்குக் கடந்து செல்ல வேண்டும். சாத்தான், சபையிலோ, வீட்டிலோ, குடும்பத்திலோ, சரீரத்திலோ, ஆவியிலோ நுழையாதபடி அவனை நிராகரிக்க வேண்டும்.

### பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்

எங்கேனும் அந்தகார வல்லமை நுழைய முற்பட்டால் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எதிர்க்க வேண்டும். "இது பிசாசு, நான் இப்போதே இயேசுவின் நாமத்தில் எதிர்க்கிறேன். அவருடைய வல்லமை பெரிது. அவர் சாத்தானை சிலுவையில் ஜெயித்து விட்டார்" என்று சத்தமாய்க் கூறுங்கள்.

சபையிலோ, குடும்பங்களிலோ, நண்பர்கள் மத்தியிலோ குழப்பங்களை ஏற்படுத்துவது சாத்தான். அவனுடைய வல்லமையைத் தகர்த்தெறிய அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்துங்கள். அதற்காகக் கல்வாரியை நினைவு கூருங்கள். தேவன் எதிரிக்கு அளித்திருக்கும் நியாயத்தீர்ப்பை (லூக்.18:7-8) எடுத்துக் கூறுங்கள். அவனை பலவந்தமாகவே அப்புறப்படுத்த வேண்டும். சாத்தானின் வல்லமையை எதிர்க்க நமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது யாக்.4:6-12.

"பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்" எபே.4:27. இது தேவ கட்டளை. நீங்கள் ஒவ்வொரு நாளும் பிசாசையும் அவனது அதிகாரத்தையும் அகற்றுகிறீர்களா? அவனை எதிர்த்துப் போராடுகிறீர்களா? ஆண்டவராகிய இயேசுவின் அதிகாரத்தினாலே 'இவ்வுலகத்தின் அதிபதி தோற்கடிக்கப்பட்டு விட்டான்' என்று சொல்லுவீர்களா? எபேசியர் 6-ன் படி உறுதியுடனிருக்கிறோமா? சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்கிறோமா? போராடுகிறோமா? உறுதியாய் நிற்கிறோமா? எப்போதும் ஜெபிக்கிறோமா?

பிசாசு கிரியை செய்யும் எவ்விடத்திலும் அவனை எதிர்க்க வேண்டும். அவனை எதிர்த்தால், அவன் ஓடிப் போவான். தேவனை நம்பி, தைரியமாக அவனை எதிர்த்து நிற்க வேண்டும்; அப்படிச் செய்தால் அவன் ஓடிப் போவது நிச்சயம் யாக்.4:7. நாம் அனுதினமும் தாழ்மையுடனும், விசுவாசத்துடனும் கிறிஸ்துவில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பணியை நம்பி நமது இடம் உன்னதங்களில் தேவனுடைய வலது பாரிசத்திலிருக்கிறது என நம்பி நமது அதிகாரத்தை பயன்படுத்தி பிசாசின் அதிகாரங்களைக் கட்ட வேண்டும்.

### மீட்பின் உரிமைகளை விசையுடன் பயன்படுத்துவது

ஒரு எழுப்புதலின் மையத்தில் வெளிப்புற எதிர்ப்பு அதிகமாகி மையம் அழிந்து விடும் போலிருந்தது. இறுதியில் போதகப் பணி செய்த சுவிசேஷகர் ஜெபிக்கும் சில மக்களைக் கூட்டிச் சேர்த்து தம்மோடு இணைந்து இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony


## வாக்குத்தத்தம்

"அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பி வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; **சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்**" *ஏசாயா 51:11.*

## ஆசிரியரின் அன்பு கடிதம்

***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,***

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதான மும் உண்டாவதாக.

*2017*-ம் ஆண்டிற்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். இப்புதிய ஆண்டு, "சஞ்சல மும் தவிப்பும் ஓடிப்போம்", "சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்" என்கிற ஆண்டாக அமைய ஜெபத்தோடு உங்களை வாழ்த்துகிறேன்.

தேவனுடைய வார்த்தைகள், வாக்குத்தத்தங்கள் எல்லாம் நிபந்தனைகளோடே உள்ளவை என்பதை எனது அருமை வாசகர் அறிந்து கொள்ள வேண்டும். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

"**ஆனாலும்** நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; . . . .என்று கட்டளை யிட்டார்" *ஆதி.2:16,17.* ஆதாமும், ஏவாளும் அதை அசட்டைச் செய்தனர்.

"**ஆனாலும்** இந்தப் பட்டணமும் இதிலுள்ள யாவும் கர்த்தருக்குச் சாபத்தீடாயிருக்கும்" *யோசுவா 6:17.* இது கர்த்தருடைய கட்டளை; ஆனால் ஆகான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்தான் *யோசுவா 7:20.*

சாபத்திற்கும், ஆசீர்வாத குறைவிற்கும் பாவமே காரணம். ஆசாபைப்போல, துன்மார்க்கரின் வாழ்வை காண்கையில் பொறாமை கொள்ளாதேயுங்கள் *சங்.73:3.*

*2016*-ம் ஆண்டு ஒவ்வொரு மாதமும் உபவாச ஜெபத்தை நடத்த வேண்டுமென்ற பாரத்தைத் தந்தவர், கிருபையாய் 12 உபவாச ஜெபங்களை நடத்த உதவிச் செய்தார், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தங்களுடைய சபை கட்டடங்களை "**எழுப்பு தலுக்காக இதய கதறல்**" உயிர் மீட்சிக்காக *7* மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தந்து, திறந்த மனதுடன் அனைத்து உதவிகளையும் செய்த *12* சபை போதகர்களையும் வாழ்த்துகிறேன்.

எங்களோடே மேடையில் அமர்ந்து முகங்குப்புற விழுந்து ஜெபித்த ஸ்தல போதகர்களையும், சபை மக்களோடே அமர்ந்து கரங்களை உயர்த்தி ஜெபித்த சபை போதகர்களையும் கண்டேன். கர்த்தர் அவர்களை அதிகம் அதிகமாக ஆசீர்வதிப்பாராக.

*12*-வது உபவாச கூடுகையில் தாழ்மையோடும், கண்ணீ ரோடும், உற்சாகமாய் ஒத்துழைத்த சபைப் போதகரும், **வருகையின் தூதன்** பத்திரிகை ஆலோசனை குழு அங்கத்தினரு மான பாஸ்டர் **D.ஸ்டான்லி ஜோன்ஸ்** அவர்களுக்காக நாங்கள் கர்த்தரை துதிக்கிறோம். "**எழுப்புதலுக்காக**" நாம் ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்ற அவரின் கடைசி நிமிட ஆலோசனைக்காக தேவனை மகிமைப் படுத்துகிறேன்.

பதினொரு உபவாச கூடுகைகளிலும் நாங்கள் ஜெபத்தைப் பற்றியே பிரசங்கித்து, ஜெபித்தோம்; ஆனால் ஆசாரிபள்ளம் உபவாச கூடுகையில் "**உபவாசம்**" பற்றி பிரசங்கிக்க வழி நடத்தப்பட்டோம்.

சபைகளில் இன்றைக்கு நடை பெறும் உபவாச கூடுகைகளைப் பற்றி சில காரியங்களை எழுதி தெரிவிக்க அடிமை கடமைப்பட்டுள்ளேன். சபை போதகர்களின் கூற்றுப்படி, காலையில் சபை மக்கள் உபவாசத்தோடு வருகிறார்களா இல்லையா என்பது தெரியாது. *2.00* மணிக்கு உபவாச ஜெபத்தை கட்டாயம் முடிக்க வேண்டும், உணவு அளிக்கப்பட வேண்டும்.

அருமையானவர்களே, இது உபவாச ஜெபமே அல்ல. வேத புஸ்தகம் சாதாரண ஜெபத்திற்கு ஒரு படிமேலே உபவாச ஜெபத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை அறியீர்களா?

(7-ம் பக்கம் பார்க்க)

நான் தேசத்தை அழிக்காதபடிக்கு . . .ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசேக் .22:30
ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!

## எழுப்புதலுக்காக இதய கதறல் - 2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

**இடம் : இயேசு நம்மோடு திருச்சபை**
P.S.K. நகர், அழகிய நகர்
சத்திரப்பட்டி ரோடு, ராஜபாளையம் - 626108

**காலம் : ஜனவரி மாதம் 3-வது சனிக்கிழமை (21-1-2017)**

**சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

**செய்தி : சகோ. வெஸ்லி தேவதாசன்,**
(ஆசிரியர், வருகையின் தூதன், நாகர்கோவில்)

**ஜெபம் : 1. NIMS மிஷனெரிகள்,** குஜராத்
2. I.E.M **மிஷனெரிகள்,** தமிழ்நாடு
3. T.L.M **மிஷனெரிகள்,** உத்திரபிரதேசம்

முன் பதிவு அவசியம்

**தொடர்பு :** பாஸ்டர் **A.அருள் சத்தியதாஸ்,** ராஜபாளையம்
மொபைல்: 9600611611

சபை பாகுபாடற்றது! அனுமதி இலவசம்!

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2017

(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 21-01-2017<br>3-வது சனி | இயேசு நம்மோடு திருச்சபை<br>சத்திரப்பட்டி ரோடு, ராஜபாளையம் |
| பிப்ரவரி | 18-02-2017<br>3-வது சனி | C.C.E.F. ஆராதனை ஸ்தலம்<br>ஆற்றூர், சேலம் |
| மார்ச் | 18-03-2017<br>3-வது சனி | விசுவாசிகளின் ஐக்கிய சபை<br>ஒட்டன் சத்திரம் |
| ஏப்ரல் | 15-04-2017<br>3-வது சனி | ஏரல் வட்டார எழுப்புதல் ஜெப ஐக்கியம்,<br>ஏரல், தூத்துக்குடி |
| மேய் | 20-05-2017<br>3-வது சனி | புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபை<br>T.R. பட்டினம், காரைக்கால் |
| ஜூன் | 04-06-2017<br>1-வது சனி | True Life Mission,<br>நாகர்கோவில் |
| ஜூலை | 15-07-2017<br>3-வது சனி | கன்மலை ஆராதனை சபை,<br>நெல்லிக்குப்பம், கடலூர் |
| ஆகஸ்ட் | 19-08-2017<br>3-வது சனி | இயேசு நம்மோடு சபை,<br>கருங்கல், குமரி மாவட்டம் |
| செப்டம்பர் | 21-9-2017<br>3-வது சனி | அசெம்பிளி ஆப் காட் சபை,<br>மணலி, சென்னை |
| அக்டோபர் | 07-10-2017<br>1-வது சனி | மாரநாதா ஜெபவீடு,<br>பொள்ளாச்சி |
| நவம்பர் | | காந்தி நகர் C.S.I. சபை<br>திருநெல்வேலி |
| டிசம்பர் | | |

**வருட சந்தா ரூ.100.00**

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

***வருகையின் தூதன்***
*நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.*

**VARUKAYIN THOOTHAN**
Newport Street, Nagercoil-629 001.
**Mobile :** 95432 21008

**வங்கி கணக்கு எண்**

**VARUKAYIN THOOTHAN**
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக எங்களுக்கு தெரிவியுங்கள்.
**email :**
varukayinthoothan@hotmail.com

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யால் சத்துருவின் வலிமையைக் கட்டும் படி கேட்டுக் கொண்டார். சில நாட்கள் துதித்துப்பாடி சத்தமாக ஜெபித்த பின்பு "இயேசுவின் நாமத்திலும் அவரது அதிகாரத்துடனும், மக்களைத் தூண்டி விடும் பெலனான மனுஷனை தேவ பணியைத் தடுக்காதபடி கட்டினோம்" *(மத்.12:29)*. பின்பு எந்த தொந்தரவும் செய்யப்படவில்லை. எதிர்த்தவர்கள் தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டபடியால் அவர்களால் சபைக்கு எதிராக தங்கள் வலிமையைக் காண் பிக்க முடியாமற் போயிற்று.

கீழ்ப்படிகிற தேவ பிள்ளைகள் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவில் தங்க ளது சிங்காசன உரிமைகளை தைரிய மாக பயன்படுத்துவதால் எவரும் அவர்களது முன்பாக எதிர்த்து நிற்க முடியாது என்பதற்கு எத்தனையோ சான்றுகளைக் கூற முடியும். ஒரு குழந்தை அதிகமாகப் பொய் பேசுவதைக் கண்ட தாய் இயேசுவின் நாமத்தின் அதிகாரத்தைக் கொண்டு அந்தப் பொய்யின் ஆவியைக் கடிந்துக் கொண் டாள். அந்தப் பிள்ளை விடுதலை பெற்றது.

ஆத்துமாக்களோடு இடை படும்போது தனிப்பட்ட பணியில் கடினங்களுண்டு. இரட்சிக்கப்பட்ட பின்பு தேவனைத் தேடுவோரின் உள்ளம் கட்டப்பட்டது போலவும் கண் பார்வை இழந்தது போலவும் காணப் படலாம். எதிர்க்கும் ஆவிகளுக்கு மேலான வெற்றியின் மனநிலை அமைதியாயிருக்கும் போது துரித விடுதலையைத் தரும்.

கிறிஸ்தவப் பணியாளர் ஒருவர் தனது மனதில் அடிக்கடி ஒரு பிரமிப் பான வலிமை வந்து ஸ்தம்பிக்கச் செய்யும் உணர்வைப் பெறுவதுமுண்டு. ஆகையால் மடங்கடிக்கப்பட்டு குழப்ப மடைகிறான்; ஏனெனில் தீய ஆவிகள் ஆகாயமண்டலத்திலிருந்து அழுத்தும் போது எதிர்க்காமல் அமைதியாக அவற் றின் முன்பு நிற்பதே அதற்குக் காரணம். ஒரு நாள் தேவனிடமிருந்து, உரத்த சத்தத்தோடு, "இது பிசாசு, நான் அவனை கர்த்தரின் நாமத்தினாலும், வல்லமை யாலும் சிலுவையில் மேற்கொண்டு விட்டேன்" என்று தேவன் அவரோடு பேசினார். உடனே மனதிலும் உடலிலு முள்ள அழுத்தத்திலிருந்தும் விடுதலை பெற்றார். மனம் தெளிவானது. அவரது சித்தம் பிசாசை எதிர்க்க பலப்பட்டது. கல்வாரியின் வெற்றியின் மேலுள்ள விசுவாசம் குழப்பமான சூழ்நிலைகளி லிருந்து விடுவித்தது. அவரது ஜெப, சாட்சி வாழ்க்கைக்குப் பல ஆண்டு களாக இருந்த தடை மாறியது.

தேவ வசனம் தெளிவாக இவ் வாறு கூறுகிறது: "உங்கள் எதிராளியான பிசாசானவன். . . . விசுவாசத்தில் உறுதி யாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங் கள்" *1பேதுரு 5:7-8*

# நல்ல போராட்டத்தைப் போராடு

**Fight the good fight!**

J.C.Ryle (1816-1900)

இந்தப் போரில் நாம் நடுநிலை வகித்து அமைதியாக இருந்து விடலாம் என்று எண்ண வேண்டாம். இது எளிதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றல்ல.

*1தீமோ.6:12*-ல் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய் தீங்கனுபவி" *2தீமோ.2:3*. "நீங்கள் பிசாசின் தந்திரங் களோடு எதிர்த்து நிற்கத் திராணி யுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத் தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத் தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதி பதிகளோடும், வான மண்டலங்களி லுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைக ளோடும் நமக்குப் போராட்டமுண்டு. ஆகையால் தீங்கு நாளில் அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும் படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை யும் எடுத்துக் கொள்ளுங்கள்" *எபே.6: 11-13*. "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்" *லூக்.13:24*. "விழித்திருங்கள், விசுவாசத் திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங் கள், திடன் கொள்ளுங்கள்" *1கொரி.16:13*. ". . . . . நல்ல போராட்டம் பண்ணும்படி . . . . நீ விசுவாசமும் நல்மனசாட்சியும் உடையவனாயிரு" *(1தீமோ.1:18)*.

நாம் போராடியே ஆக வேண் டும் என்ற தேவை நம் மீது வைக்கப் படுகிறது. ஏழு சபைகளுக்கும் எழுதப் படும் நிருபங்களில் ஜெயங்கொள்ளு கிறவர்களைத் தவிர யாருக்கும் வாக்குத் தத்தங்கள் கொடுக்கப்படவில்லை. **விசுவாசி ஒரு போர்வீரன்.** போராட்ட மின்றி தூய்மையில்லை . . . இரட்சிக்கப் பட்ட ஆத்துமாக்கள் ஒரு யுத்தம் பண்ணி முடித்தவர்கள்.

இந்த யுத்தம் உலகமனைத் திற்கும் தேவையானது. தரமோ, வகுப்போ, வயதோ இதற்கு விதிவிலக் கல்ல. யாரும் தப்பிச் செல்லவும் முடியாது. நாம் அனைவருமே, கண்ணி களும், பொறிகளும், குழிகளும் நிறைந்த உலகிலேயே நாம் வாழுகிறோம். எல்லா ருடைய அருகிலும், சுறுசுறுப்பான, இளைப்பாறுதலற்ற, கேடு செய்யும் சாத்தான் நின்று கொண்டிருக்கிறான். இந்தப் போர் முடிவில்லாத தேவை யுடையது. இந்தப் போரின் போது மூச்சு விடவும் சமயமில்லாத நிலை. போர் நிறுத்தம், தற்காலிக ஒப்பந்தம் போன்றவைகளுக்கு இடமில்லை. வார நாட்களோடு ஞாயிற்றுக் கிழமையிலும், தனியாகவும் பகிரங்கமாகவும், இல்லத் திலும், தூர இடங்களிலும், நாவைக் கட்டுப்படுத்துவது கோபம் போன்ற சிறிய காரியத்திலிருந்து ராஜ்யங்களை ஆளுவது போன்ற பெரிய காரியங்கள் வரை கிறிஸ்தவனின் போராட்டம் தடையின்றி நடந்து கொண்டேயிருக்க வேண்டும். நமது எதிரிக்கு விடுமுறை நாட்களில்லை. அவன் தூங்குவதும் உறங்குவதுமில்லை. நமது உயிர் இருக் கும் வரை நாம் ஆயுதங்களைத் தரித்த வர்களாய் நாம் யுத்தக் களத்தில் நிற்கும் நினைவோடிருக்க வேண்டும். தனது மரண யோர்தான் கரையில் நின்று கொண்டிருந்த ஒரு பக்தன் 'இப்போது கூட சாத்தான் என் குதிகால்களை சிறிது சிறிதாகக் கடித்துக் கொண்டிருக்கிறான்' என்றாராம். எனவே மரண மட்டும் நாம் போராட வேண்டும்.

### வசனத்திலும் கிறிஸ்துவிலும் விசுவாசம்

உண்மையான கிறிஸ்தவம் என்பது விசுவாசத்தின் போராட்டம். இவ்விஷயத்தில் இது உலகப் போராட் டங்களை விட மிக வித்தியாசமானது. இது உறுதியான கரங்களையோ கூர்மை யான பார்வையையோ, வேகமான கால்களையோ சார்ந்ததல்ல. மாம்சீக போராயுதங்களோடுள்ள போருமல்ல. இது ஆவிக்குரிய போராட்டம். விசு வாசம் என்ற ஆதாரத்தில்தான் வெற்றி யைப் பெற முடியும்.

தேவனுடைய சத்திய வசனத் தின் மீதுள்ள பொதுவான விசுவாசம் ஒரு கிறிஸ்தவ போர் வீரனுடைய குணாதிசயங்களின் முக்கிய அடிப் படை. அவன் அவனாகவே இருக் கிறான். அவன் செய்கிறதை செய்கி றான். சிந்திக்கிறதை சிந்திக்கிறான். செயல்படுகிற விதமாக செயல்படு கிறான். எதிர் பார்க்கிற விதமாகவே எதிர்பார்க்கிறான். நடந்து கொள்ளுகிற விதமாகவே நடந்து கொள்கிறான். இதற்குக் காரணம் அவன் வேத வாக்கி யங்களை விசுவாசிக்கிறான். ". . . தேவனிடத்தில் சேருகிறவன், அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிற வர்களுக்குப் பலன் அளிக்கிறவரென் றும் விசுவாசிக்க வேண்டும்" *எபி.11:6*.

கர்த்தரிலுள்ள விசேஷித்த விசு வாசம், அவரது பணி, செயல்பாடு ஆகியவை கிறிஸ்தவ போர்வீரனில் ஜீவனும், இருதயமும், முக்கிய ஊற்று மாயிருக்கிறது. தன்னை நேசித்து, தன்னையே தனக்காகக் கொடுத்தவரும் தன் கடன்களை செலுத்தித் தீர்த்தவரும் தன் பாவங்களை சுமந்தவரும், அக்கிர மங்களை தன் மீது ஏற்றுக் கொண்ட வரும், உயிரோடெழுந்தவரும், தேவனு டைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற வருமான இரட்சகரை விசுவாசத்தால் அவன் காண்கிறான்.

இயேசுவைப் பார்த்து அவரைப் பற்றிக் கொள்ளுகிறான். அவரை நம்பி

சமாதானத்தையும், நம்பிக்கையையும் பெற்றவனாக விருப்பத்துடன் ஆத்தும விரோதிக்கு எதிராகப் போரிடுகிறான். அவன் தனது பாவங்களையும், பெல வீனமான இருதயத்தையும், சோதனை நிறைந்த உலகத்தையும், விரைந்து செயல்படும் சாத்தானையும் பார்க்கி றான். இவைகளைப் பார்த்தால் மனச் சோர்புதான் ஏற்படும். எனவே வல்லமை யுள்ளவரும், பரிந்து பேசுகிறவரும் பரிதாபம் நிறைந்தவருமான இரட்சக ரையும், அவரது இரத்தம், நீதி, நித்திய ஆசாரியத்துவம் ஆகியவை தனக்கு சொந்தமானவை என்று நம்புகிறான். இயேசுவிடம் தனது முழு பாரத்தையும் வைத்து விடுகிறான். சந்தோஷமாக முழு நம்பிக்கையுடன் 'நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளு கிறவர்களாயிருக்கிறோம்' ரோமர் 8:37 என்று முன்னேறிச் செல்கிறான்.

கிறிஸ்துவின் போர்வீரர் வெற்றி யுடன் போர்புரிய உயிருள்ள விசுவாச மும், உதவி செய்ய ஆயத்தமும் முக்கிய இரகசியமாகும். பார்த்துக் கொண்டே யிருப்பதால் களைப்பும் குழப்பமுமே அதிகரிக்கும். கிறிஸ்து நம்மில் வாசம் பண்ணி நமக்கு ஆதரவாயிருக்கிறார் என்ற உறுதி வெற்றியை அளிக்கும்.

பொல்லாதவனின் அக்கினி அஸ்திரங்களை அவிக்க விசுவாசம் என்னும் கேடயம் வேண்டும். 'நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறி வேன்' என்று நாம் சொல்லக் கூடியவர் களாயிருக்க வேண்டும். பாடுபடும் போது, 'நான் வெட்கப்படவில்லை' 2தீமோ.1:12 என்று சொல்ல முடியுமா? "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. . . . உள்ளான மனுஷ னானது நாளுக்கு நாள் புதிதாக்கப் படுகிறது. . . .அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது" 2கொரி. 4:16-17 என்று எழுதியவர் "காணப்படு கிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமான வைகள்" என்றும் 18-ம் வசனத்தில் குறிப் பிடுகிறார். " இனி நான் அல்ல, கிறிஸ் துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" கலா.2:20. "அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறை யுண்டிருக்கிறேன்" கலா.6:14. 'கிறிஸ்து எனக்கு ஜீவன்' பிலி.1:21. ". . . .நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமா யிருக்கக் கற்றுக் கொண்டேன்" பிலி.4:11.

"என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" பிலி.4:13. விசுவாசம் பெருகப் பெருக வெற்றியும் அதிகமாகும். உள்ளான சமாதானமும் பெருகும்.

வெற்றியுடன் போர்புரிய விசு வாசம் வளரும்படி தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். கிறிஸ்துவில் நிலைத்திருந்து அவரோடு நெருங்கி, அவரைப் பற்றிப் பிடிக்க வேண்டும். 'ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணும்' லூக்.17:5 என்று சீஷர்கள் ஜெபித்தது போல ஜெபிக்க வேண்டும். விசுவாச மாகிய கிறிஸ்தவ பண்பின் மீதுதான் கோட்டையின் முழுப் பாதுகாவலு மிருக்கிறது.

வெற்றிப் போர் புரிய தேவனு டைய சர்வாயுத வர்க்கத்தை அணிய வேண்டும். அதின் ஒரு பகுதியையும் அணியாமலிருக்கக் கூடாது. அனைத் துமே தேவையானவை. சத்தியம் என்ற கச்சை, நீதி என்னும் மார்க்கவசம், விசுவாசம் என்ற கேடயம், வேதவசன மாகிய ஆவியின் பட்டயம், இரட்சிப்பு என்ற தலைச்சீரா அனைத்துமே தேவை யானவை. இவ்வுலகில் பணியிலும், தூக்கத்திலும், எப்போதுமே இந்த ஆயுதங்களைத் தரித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான போர் வீரர்கள்; ஆனால் பரலோகத்தில் நாம் மகிமையான அங்கிகளைத் தரிப்போம் என்று ஒரு பக்தன் கூறுகிறார்.

### கிறிஸ்துவின் முலம் வெற்றி

நமது அன்பின் இரட்சகரின் கண்கள் எப்போதும் நம்மை நோக்கிக் கொண்டிருக்கின்றன. நம் திராணிக்கு மேல் அவர் நம்மை சோதிக்க மாட்டார். அவர் சோதிக்கப்பட்டுப் பாடுபட்ட படியினாலே, நம்முடைய பலவீனங் களில் நமக்கு உதவி செய்யக் கூடியவரா யிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிற படியால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம் எபி.4:14.

நமக்கு முன்னே சென்ற அனே கர் இதே போராட்டத்தை போராடி ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் வெற்றி பெற்றார்கள். கிறிஸ்துவின் கரம் இன்றும் வலுவாகவேயிருக்கிறது. அவரது அன்பிற்கும் மாற்றமில்லை. அவர் நம்மை முற்று முடிய இரட்சிக்கக் கூடியவர் எபி.7:25.

காலம் சமீபமாயிற்று, அவர் வருகை நெருங்கி விட்டது. இன்னும் சில போர்களின் முடிவில் எக்காளம் ஊதப்படும். சமாதானப் பிரபு ஆட்சிக்கு வருவார். நித்தியமாக யுத்தங்களுக்கு விடையளிக்கலாம். பாவம், துக்கம், மரணம் யாவும் அகன்று போகும். நமது ஆண்டவர் "ஜெயங் கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள் வான், நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" என்பார்.

# ஆங்கில வருகையின் தூதன் பத்திரிகை வெளியிட ஆரம்பித்து 75 ஆண்டுகள்!

# தேவனுக்கே மகிமை!

**Seventy five years of publishing Herald of His Coming**

To God be the Glory!

கடந்த செப்டம்பர் மாதத் தோடு தூதன் ஊழியத்தின் 75வது நிறைவு விழாவைக் காணச் செய்த தேவனைத் துதிப்போம். W.C.மூர் தம்பதிகள் 8 பக்கங்கள் அடங்கிய இப்பத்திரிகையை (Herald of His Advent) என 1941 செப்டம்பர் மாதம் 10,000 பிரதிகளுடன் ஆரம்பித்தனர். அப்போது 75 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வெளியீடு மக்களுக்கு நற்செய்தியை அளிக்கும் என்று எண்ணிப் பார்த்திருக்க முடியாது. இன்று இந்த அலுவல கத்தில் தேவன் தந்த ஆசீர்வாதங் களுக்காகவும், தேவைகள் சந்திக்கப் பட்டதற்காகவும் மற்றும் இதன் மூலம் இந்தக் கடைசி நாட்களில் கிறிஸ்துவின் வருகையை அறிவிக்கும் வாய்ப்பிற்காக வும் அவரைத் துதிக்கிறோம்.

### கர்த்தரின் அழைப்பிற்கு உண்மையாயிருந்தனர்

மூர் தம்பதிகளோடு நீண்ட காலம் பத்திராதிபராக பணியாற்றிய லாயிஸ் ஸ்டுக்கி (Lois Stucky) "அழிந்து கொண்டிருக்கும் உலகத்தின் பாரத்தை உணர்ந்ததோடு பரம மணவாளனுக் குத் தன்னை ஆயத்தம் பண்ணாததும், ஆவியால் நிரப்பப்படாததுமான சபை யைக் குறித்தும் உணர்ந்தனர். எனவே கர்த்தர் சபைக்குள்ளும் வெளியேவும் இருந்தவர்களை மறுபடியும் மறுபடி யும் மனந்திரும்ப அழைக்கும்படி வழி நடத்தினார். அவர்கள் தேவன் தமது வசனத்தில் பேசியிருந்த உறுதியான விசுவாசத்தையும், இந்த இக்கட்டான வேளையில் எழுப்புதலின் தூய ஆவியா னவர் மக்களில் பொழியப்பட தேவை யான பாவமன்னிப்பையும், ஜெபத்தை யும் அறிவித்து சபையை கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுத்தவும் எல்லா ஜனங்கள் மத்தியிலிருந்தும் ஆத்தும அறுவடை பெற்றுக் கொள்ளவும் தேவன் அவர்களைத் தெரிந்து கொண் டார்" என்று எழுதியிருக்கிறார்கள்.

**வருகையின் தூதன் ஊழியத்தின் நோக்கங்கள்:**

1. எல்லா இடங்களிலும் கிறிஸ்தவர் களிடம் எழுப்புதலை உற்சாகப்படுத்து வது, அது தேவ ஆவியால் தூண்டப் பட்டு எழுதப்பட்ட வேத வசனத்திற்கு ஒத்ததாயிருக்க வேண்டும்.

2. தேவ ஜனம் தூய்மையான வாழ்வு வாழ அழைக்கப்படுவதும் அவர்கள் தொடர்ந்து வரப்போகிற ஆண்டவ ருக்காக ஆயத்தப்படவும் அவர்களை அவசரப்படுத்துவது.

3. தங்களுக்குள்ளும் பிறருக்கு நேராகவும் தர்ம சிந்தையுடன் காணப் பட உற்சாகப்படுத்துவது.

4. கிறிஸ்தவ வாழ்வின் அந்தஸ்து நிலையை வேத வசனத்தின்படி காத்துக் கொள்வது.

5. பிலி.1:8-17-ன் படி முன்னேறிச் செல்ல வேண்டும். பாவத்தில் அழியும் மக்களை இரட்சிப்புக்குள் கொண்டு வரவும், தேவ ஜனத்தை வருகைக்காக ஆயத்தப்படுத்தவும், தேவ சித்தத்தை எல்லாருடைய வாழ்விலும் நிறைவேற்றவும், அவர் வரும் வரை சுறுசுறுப்பாய் சேவை செய்யவும் வேண்டும் லூக்.19:13.

**தேவ அழைப்பில் முன்னேறிச் செல்லுதல்**

கடந்த 75 ஆண்டுகளையும் நாம் கனப்படுத்தினாலும் எங்கள் இருதயங்கள் இந்த ஊழியத்தில் அவரது அழைப்பில் முன்னேறி காலத்தை ஆதாயப்படுத்துவது முக்கியமாயிருக்கிறது எபே.5:16. ஜெபம், பாவ மன்னிப்பு, எழுப்புதல், வருகைக்காகக் காத்திருத்தல் ஆகியவற்றிற்காக நம்மால் இயன்ற அளவு செயல்பட வேண்டும். மேலும் ஸ்டுக்கி (Stucky) அவர்கள் ஒரு முறை நமக்கு முன்னாலுள்ள சவால், நம்பிக்கை ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

திரளான ஒத்தாசையாளர்கள், பணியாளர்கள் போன்றவர்கள் இவ்வூழியத்திலிருந்து தங்கள் ஓட்டத்தை உத்தமமாக முடித்து கடந்த ஆண்டுகளில் தேவ ராஜ்யத்தில் தங்கள் வெகுமதிகளைப் பெற்று விட்டார்கள். இப்போது அந்த உக்கிராணத்துவத்தின் சால்வை நம்மீது விழுந்திருக்கிறது.

அவர்கள் சேவித்த உண்மையுள்ள தேவனையே நாமும் சேவிக்கிறோம். அவர்களைப் போல பெரிய காரியங்களை நாம் எதிர்பார்க்கவும் செய்யவும் வேதவசனம் நமக்கு வாக்களிக்கிறது. ஆண்டவருக்காக நாம் நம்மைத் தனிமைப்படுத்த வேண்டும். நமது கண்கள் நமது இலக்கை நோக்கியிருக்க வேண்டும். விசுவாசத்தைக் காத்துக் கொண்டு உத்தமமாக அவர் வரும்வரை அவரைச் சார்ந்து சுறுசுறுப்பாய் செயல்பட வேண்டும்.

உலகத்தின் நிலைமை மிக மிக மோசமாகி விட்டது. இது மனிதனுக்கு மிக அதிகமாகத் தோன்றினாலும் தேவனுக்கு அவைகள் அதிகமானவைகளல்ல. அவர் மிகுந்த வல்லமையோடு அசைவாடும் போது தூய ஆவியானவர் ஊற்றப்பட்டு அதிசயங்கள் நடைபெறும். கூடாதவைகள் என்று கருதப்பட்டவைகள் நடைபெறும். நமது தேவன் மிகுந்த வல்லமையுடையவர். அவரை சேவிப்பது எத்தனை பெரிய பாக்கியம்! தேவன் நமக்குக் கட்டளையிடுகிறவைகளை முழுமனதோடு நாம் செய்யும்போது நமது முயற்சிகளுக்கு பரிசு உண்டு. எனவே நமது நாட்களில் எழுப்புதல் ஏற்பட இணைந்து முன்னேறுவோம்.

நமது அருமை சகோதரி ஸ்டுக்கி (Sis.Stucky) தனது ஓட்டத்தை வெற்றியுடன் முடித்து தனக்குரிய வெகுமதியைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்களைப் போல கடந்து சென்றவர்கள் சேவித்த உண்மையுள்ள தேவனையே நாம் சார்ந்து வாழுவோம். அவர் மாறாதவர். அவர் எப்போதும் எங்கும் நம்மோடிருந்து செயல்படுகிறவர். அவரது அன்பு பொறுமை ஆகியவை தொடர்ந்து இழந்து போன மக்களை இரட்சிக்க செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவரது பணியில் ஒரு சிறு பகுதியை தூதன் ஊழியம் செய்கிறது.

மேலும் தேவன் தமது பிள்ளைகள் மூலம் தந்து வருகிற ஐக்கியத்திற்காகவும் அவர்கள் மூலம் ஊழியத்திற்குக் கிடைத்து வருகிற ஜெப உதவி, பொருளுதவி, நல்லாலோசனைகள் ஆகிய உதவிகளுக்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறோம். சகோ.மூர் அவர்களது வார்த்தைகள் மூலம் உங்களை ஆசீர்வதிக்கிறோம். கர்த்தருடைய ஆசீர்வாதம் ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். இந்த ஆசீர்வாதம் குடும்பங்களிலும், அவர்களுடைய கைகளின் பிரயாசங்களிலும் தங்கியிருப்பதாக. அவர்கள் எங்கிருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அனைவர் மேலும் தெளிக்கப்பட்டு பாதுகாப்பதாக.

**பயனுள்ள ஊழியத்தில் ஜெபம்**

இந்த 75 ஆண்டுகளாக தூதன் ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்த தற்காக எங்களோடு சேர்ந்து நன்றி செலுத்துங்கள். இதன் மூலம் தொடர்ந்து வரும் நாட்களில் தேவன் திட்டமிட்ட ஊழியம் நிறைவேற வேண்டும்.

மேலும் தூய ஆவியானவரின் வல்லமை, நடத்துதல், நிறைவு ஆகியவற்றால் ஊழியம் ஆசீர்வதிக்கப்படுவதோடு பணியாளர்களையும் நிரப்ப வேண்டும்.

கர்த்தருடைய புது அபிஷேகம் பத்திரிகையின் மேலும் இறங்க வேண்டும். அதன் ஒவ்வொரு பகுதிகளும் வல்லமையையும் ஜீவனையும் வாசகர்களுக்கு அளித்து அவர்களை பெலப்படுத்த வேண்டும். அதன் மூலம் அவர்கள் தேவனோடு நெருங்கிய உறவு கொள்ளவும், வருகைக்காக தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

தேவைகள் எல்லாம் சந்திக்கப்படவும் அனைத்து பாஷைகளிலுள்ள பத்திரிகைகளும் விரிவடையவும் இரட்சிப்பினைக் குறித்த பிரசுரங்கள் அதிகரிக்கவும் ஜெபிப்போம்.

தூய ஆவியானவர் வல்லமையாய்க் கிரியை செய்து ஒவ்வொரு வருடைய வாழ்விலும் அவர்கள் கிறிஸ்துவை நெருங்கிச் சேர உதவி செய்யும் படியாக ஜெபிப்போம்.

தேவனால் எல்லாம் கூடும் என்பதனை மனதில் கொண்டு மக்களின் தனிப்பட்ட, குழு வாழ்க்கையில் எழுப்புதல் ஏற்பட்டு அதிக கனிகள் வரும் நாட்களில் ஏற்படவும் தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபிப்போம்.

இந்தக் கடைசி நாட்களில் எங்களோடு ஊழியத்தில் பங்காளிகளாயிருக்கும் உங்களுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். விரைவில் எங்களோடு தொடர்பு கொள்ள எதிர் பார்க்கிறோம்.

# கிறிஸ்தவனின் பாதுகாவலான போராயுதங்கள்

**The protective armour of the Christian**

Derek Prince

"தீமை என்பது ஏதோ ஒரு பொருளல்ல, அது ஒரு நபர்". இந்த உண்மையை நாம் அறிந்திருந்தால் ஆவிக்குரிய போராட்டத்தைக் குறித்த அறிவில் ஒருபடி முன் சென்றிருப்போம்.

எல்லா கிறிஸ்தவர்களுமே பிசாசோடு நேரடியாகத் தனிப்பட்ட போராட்டத்திலிருக்கிறார்கள் என்று வேத வசனம் எச்சரிக்கிறது. பவுல் சாத்தானைக் குறித்து அவன் வஞ்சகன் என்றும் தந்திரவான் என்றும் எச்சரிக்கிறார். அதன் அடிப்படையில் நாம் நம்மை ஆயத்தப்படுத்த அவர் நம்மை அறிவுறுத்துகிறார்.

எபே.6:12 ஐ நான் இவ்வாறு பகுத்துச் சொல்லுகிறேன். நமது மல்யுத்தம் மனிதரோடும் சரீரங்களோடு மல்ல ஆனால் அதிகாரங்களோடும், அதிகாரிகளோடும், மேலும் இந்நாட்களின் இருளின் உலக அதிகாரங்கள் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகள் போன்ற ஆவிக்குரிய ஆதிக்கங்களோடு நாம் போராடுகிறோம்.

நாம் மிகவும் சீராக ஒழுங்குப்படுத்தப்பட்ட, நல்ல மத்திய ஆட்சியையுடைய, கண்ணுக்குப் புலனாகாத ஆவிக்குரிய அரசாகிய சாத்தானின் அரசோடு போராடுகிறோம். சாத்தானுடைய தலைமைக் குடியிருப்பு வான மண்டலங்களிலிருக்கிறது. அங்கு அவன் புரட்சி செய்யும் ஒரு கூட்டம் தூதர்களை ஆளுகிறான். அவர்கள் உலகத்தை தீமைக்கு வழிநடத்த அதிகாரமுடைய வர்களாயிருக்கிறார்கள்.

அவனது அரசின் பூமியின் கீழ்ப் பகுதியில் எண்ண முடியாத பிசாசுகளும், தீய ஆவிகளுமிருக்கின்றன. சாத்தானுக்குக் கீழாக கிளை ஆட்சியாளர்கள், சாம்ராஜ்யங்கள், ராஜ்யங்கள், நாடுகள், சமுதாயங்கள், பட்டணங்கள் போன்ற பிரிவுகளை ஏற்படுத்தி மனித குலத்தை சீர்குலைக்க திட்டமிடுகிறார்கள்.

இந்த யுத்தத்தில் போரிட தகுதியான ஆயுதங்களைக் குறித்து 2கொரி.10:3-5 வசனங்களில் படிக்கிறோம். அவை ஆவிக்குரியவை, மாம்சத்துக் குரியவையல்ல. தேவனால் அரண்களை நிர்மூலமாக்கும் சக்தியுடையவை. மனித உள்ளம் போராட்டக்களம் என்று வசனம் 5 கூறுகிறது. 'தாக்கங்கள்',

'அறிவு', 'மேட்டிமை', 'எண்ணங்கள்' போன்ற பதங்கள் அங்கு காணப்படுகின்றன. இவைதான் உள்ளத்தில் கிரியை செய்கின்றன.

இன்னொரு விதமாகக் கூறினால் நாம் கண்ணுக்குப் புலப்படாத விசைகளோடு ஒரு பயங்கர யுத்தத்திலிருக்கிறோம். தேவ ஜனமாக நாம் மனித உள்ளங்களை சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவித்து கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் செய்ய வேண்டும்.

இந்தப் போருக்கான ஆயுதங்கள் கிறிஸ்தவர்களிடம் மட்டுமே உண்டு. எனவே நாம் விசேஷித்தவர்கள். நாம் இதனால் அரசியல், சேனை, போன்றவற்றின் தலைவர்கள், விஞ்ஞானிகள், மற்றும் இதைப் போன்ற வர்களை விட நாம் மேலானவர்கள்; ஏனெனில் அவர்கள் ஆவிக்குரிய போராயுதங்களை உடையவர்களல்ல, நாமோ தரிப்பிக்கப்பட்டவர்கள்.

### நமது போராயுதங்கள்

சாத்தானுக்கு எதிராகப் போராடி ஜெபிக்கிறவர்கள் பாதுகாவலான ஆயுதங்களைத் தரிக்காமலிருப்பது ஆபத்தானது. எந்த ஒரு முக்கிய தேவைக்காக ஜெபித்தாலும், நரகத்தை அதிரச் செய்ய வேண்டுமானால் பாதுகாப்பான ஆயுதங்கள் அவசியம்.

இதைப் பவுல் அன்றைய ரோம போர்வீரரின் பாதுகாவலான போராயுதங்கள் மூலம் விவரிக்கிறார். எபேசி.6:13 முதல் 17 வசனங்கள் வரையிலும் 6 ஆயுதங்கள் கூறப்படுகின்றன.

### கிடைக்கச்சை வச.14

சத்தியம் என்னும் கச்சை முதலாவது கூறப்படுகிறது. பவுல் அப்போஸ்தலன் காலத்தில் தளர்வான நீண்ட கீழ்ஆடைகள் அணியப்பட்டன. ஒரு செயலைச் செய்ய முற்படும் போது தடையில்லாமலிருக்க 'இடையைக் கட்டிக் கொள்ள' வேண்டும். மார்க்க வாதிகள் என்று சொல்லப்படுகிறவர்களின் நேர்மையற்ற தன்மைகள் காணப்படக் கூடாது.

ஆண்டவர் இயேசு அடிக்கடி பரிசேயரின் மாய்மாலமாகிய புளித்த மாவைக் குறித்து எச்சரித்தார். மாய்மாலம் என்பதற்கான கிரேக்க பதம் நடிகனைக் குறிக்கிறது. முற்கால கிரீஸ் நாட்டில் நடிகன் மேடையில் வரும் போது ஒரு முகமூடியுடன் வருவான். அவன் எப்படிப்பட்டவனாய் நடிக்க வேண்டும் என்பதை அது காண்பிக்கும். அவன் ஒருபோதும் தனது சொந்த ஆடையில் மேடையில் வருவதில்லை.

ஆவிக்குரிய உலகத்தில் ஒருவன் தனக்கு ஒரு முகமூடியைத் தெரிந்து கொள்கிறான். அதன் மூலம் அவன் எப்படி செயல்படப் போகிறான் என்பது தீர்மானிக்கப்படுகிறது. அந்த முகமூடியின் தன்மைக்கு ஒப்பாகவே அவன் நடிப்பான். ஆகவே அவனுடைய இயற்கையான தன்மை வெளிப்படுவதே இல்லை.

மேலும் 'சத்தியம் என்னும் கச்சை' என்று பவுல் சொல்லும் போது உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்ல வேண்டும். பொய்யைப் பொய்யென்றும், இச்சையை இச்சையென்றும் தான் சொல்ல வேண்டும். நாம் சத்தியம் என்ற கச்சையால் இடையைக் கட்டா விட்டால் நாம் அசையும் போதெல்லாம் ஆடை கால்களில் சிக்கித் தடுமாற வேண்டியதாகும். எனவே முதல் முதலான பாதுகாவலின் ஆயுதம் சத்தியமாகிய கச்சை என்றால் மிகையாகாது.

### மார்க்கவசம்

14-ம் வசனம் இந்த இரண்டாம் ஆயுதத்தைக் குறித்துக் கூறுகிறது. நீதியென்னும் மார்க்கவசம் இது. மார்புப் பகுதியில் காணப்படும் முக்கிய உறுப்பு இருதயம். எனவே இது இருதயத்தைப் பாதுகாக்கும் ஆயுதம். நீதி.4:23-ல் 'எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்' என்று படிக்கிறோம்.

நான் கென்யாவில் மிஷனெரியாக கற்பித்த போது இந்த வசனம் மாணவர்கள் தங்கும் அறையில் தொங்குவதைக் கண்டேன். அது வேறு மொழியில் எழுதப்பட்டிருந்ததால் அது என் கவனத்தைக் கவர்ந்தது. அந்த மொழியின்படி அந்த வசனத்தின் பொருள், "உன் இருதயத்தை உன் முழு பெலத்தோடும் காத்துக்கொள்; ஏனெனில் அங்கிருப்பவையெல்லாம் வாழ்வில் வெளியேறுகின்றன".

நமது இருதயத்தில் இருப்பவைகளெல்லாம் நமது வாழ்வின் ஓட்டத்தைத் தீர்மானிக்கின்றன. இருதயம் கசப்பு, அவிசுவாசம், பயம் போன்ற வற்றால் நிரம்பியிருந்தால் வாழ்வு தவறான திசையில் செல்லும். ஆனால் அது விசுவாசம், சமாதானம், அன்பு ஆகியவற்றால் நிரம்பியிருந்தால் வாழ்வு சரியான திசையில் செல்லும். நமது முழு பெலத்தோடும் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். அதற்காக நீதி என்னும் மார்க்கவசத்தை அணியும்படி பவுல் கூறுகிறார்.

நீதி என்பது இருதயத்தின் ஒரு நிலை. அது தலையிலிருந்து ஏற்படுவதல்ல. இதற்கு இணையான ஒரு வசனம் 1தெச.5:8-ல் காணப்படுகிறது. "பகலுக்குரியவர்களாகிய நாமோ, தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தையும். . . தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்". இந்த வசனத்தில் மார்க்கவசம் விசுவாசமும் அன்பும் என விளக்கப்படுகிறது. இது முரண்பாடல்ல. புதிய ஏற்பாட்டின்படி நீதி என்பது அன்பினால் கிரியை செய்யும் விசுவாசமாகும். இது இருதயத்தின் ஒரு நிலை.

ரோமர் 10:10-ல் இன்னொரு உட்பார்வை காணப்படுகிறது. "நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் . . . ." மூளையால் விசுவாசிப்பதற்கும் இருதயத்தால் விசுவாசிப்பதற்கும் வேறுபாடு உண்டு. மூளையால் விசுவாசிக்கிறவனது நடைமுறைகளில் வேறுபாடு ஏற்படுவதில்லை. ஆனால் இருதயத்தில் விசுவாசிப்போமானால் நம் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படும். ஆக நீதி என்ற மார்க்கவசம் என்பது அன்பினால் கிரியை செய்யும் இருதயத்திலுள்ள விசுவாசமாகும்.

நான் செய்வது அன்பினாலே தானா என மறுபடியும் மறுபடியும் எண்ணிப் பார்க்கிறேன். இல்லா விட்டால் அது தவறு. நாம் கோபம் கொள்கிறவர்களிடம் எதிர் பேசினால் சரியான பலன் கிடைப்பதில்லை. நாம் நமது இருதயத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் செய்வது விசுவாசத்தினால் கிரியை செய்யும் அன்பின் அடிப்படையில்தானா?

### பாதரட்சை

"சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை" வச.15. ரோம சேவகர்கள் அணியும் பூட்ஸ் கெண்டைக்காலை சுற்றிலும் சூழ்ந்து வார்ப்பட்டைகளுடன் காணப்படும். இவற்றை அணிந்து கொண்டு வீரர்கள் நெடுந்தூரம் செல்ல முடியும்.

நான் இரு ஆண்டுகள் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரிட்டீஷ் காரர்களோடு வட ஆப்ரிக்காவில் போர் வீரனாகப் பணியாற்றியதால் இந்த விதபாதரட்சைகளைக் குறித்து நன்றாக அறிவேன். எதிரிகள் அருகிலிருந்தால் இந்தக் காலணிகளுடன் தான் நாங்கள் தூங்க வேண்டும். ஏனெனில் திடீரென எச்சரிக்கை மணியோசை கேட்டால் அதனை அணிந்து கொள்ளும் போது கால தாமதம் ஏற்படும். எனவே நீங்கள் பாதுகாவலுள்ளவர்களாகவும், ஆயத்த முள்ளவர்களாகவும் இருப்பது அவசியம். இது முன்கூட்டியே செய்யப்பட வேண்டும்.

இதில் இரு கருத்துக்கள் அடங்கியுள்ளன. சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள முன்கூட்டியே ஆயத்தம் வேண்டும் என்பது ஒன்று. வேதவசனத்திலுள்ள சுவிசேஷத்தின் உண்மைகளின் அடிப்படை நமக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். மறுபடியும் பிறந்த அனேகர் சபை அங்கத்தினராயிருந்தும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிப்பது எளிதாயிருப்பினும் அறிவிக்கத் திறமையற்றிருக்கிறார்கள். ஆயத்தம் என்பது கிறிஸ்தவன் முன்கூட்டியே தன் விசுவாசத்தை பிறர் முன் வைக்க தரிப்பிக்கப்பட்டவனாகவும், அடிப்படை சுவிசேஷ சத்தியங்களை விளக்கக் கூடியவனாயுமிருக்க வேண்டும்.

இன்னொரு தேவை 'சமாதானம் என்னும் சுவிசேஷம்' என்று சுட்டிக் காண்பிக்கப்படுகிறது. தேவனோடு சமாதானம் வேண்டுமானால் நம்மில் சமாதானம் வேண்டும். அதாவது நாம் சமாதானத்தைக் கடத்துகிறவர்களாயிருக்க வேண்டும். மனந்திரும்பாத

(7-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

**"இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத் தினாலும் புறப்பட்டுப் போகாது" என்றார் இயேசுகிறிஸ்து** மத்.17:21.

*பலவிதமான உபவாச ஜெபங்களை நாம் வேத புஸ்தகத்தில் படிக்கிறோம், அதில் ஒன்று தானியேலுடையது.*

*"தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித் தீர எழுபது வருஷம் செல்லுமென்று. . . அறிந்து கொண்டேன்.*

*நான் **உபவாசம் பண்ணி**, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப் பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி, என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி, பாவ அறிக்கை செய்து:" தானியேல் 9:2-4*

*தன்னுடைய ஜனங்களின் இரட்சிப் புக்காக **உபவாசம்** பண்ணின எஸ்தர் ராஜாத்தியை பற்றி பிரசங்கிக்கும் பாக்கி யத்தை எங்களுக்கு தேவன் 12-வது கூடுகையில் தந்தார். அதிலே 70,80 வயதுடையவர்களும் இருந்தோம்.*

*நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, **மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து,** எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; எஸ்தர் 4:16.*

*மோசேயின் வார்த்தைகளை கவனி யுங்கள்: கர்த்தரைக் கோபப்படுத்து வதற்கு நீங்கள் அவருடைய சமுகத்தில் பொல்லாப்புச் செய்து நடப்பித்த உங்க ளுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போல இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்துக் கிடந்தேன்; **நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை** உபாகமம் 9:18.*

*அவர் (ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து) **இரவும் பகலும் நாற்பது நாள்** உபவாசமிருந்த பின்பு, அவருக்குப் பசியுண்டா யிற்று மத்.4:2.*

*நாற்பது நாள் பிசாசினால் சோதிக் கப்பட்டார். **அந்த நாட்களில் அவர் ஒன் றும் புசியாதிருந்தார்;** அந்த நாட்கள் முடிந்த பின்பு அவருக்குப் பசியுண்டா யிற்று லூக்கா 4:2.*

*கர்த்தருக்குச் சித்தமானால் ஜனவரி மாத உபவாச கூடுகை ராஜபாளயத் திலுள்ள **இயேசு நம்மோடு தீருச் சபை**யில் நடைபெறும், விருதுநகர் மாவட்ட தூதன் வாசகர் கலந்து கொள்ளுமாறு அன்பாய் அழைக்கிறோம்.*

**உபவாச ஜெபக்தில் என்னுடன் பங்குபெறும் ஒருவர் பெயரிலோ, உபவாச ஜெபக்திற்காக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியிலோ தயவு செய்து மணி ஆர்டர் அனுப்பாதேயுங்கள்.** அவற்றை நாங்கள் பெற்றுக் கொள்ள இயலாது. 2-ம் பக்கத்தில் கட்டத்திலுள்ள விபரங் களைக் கவனித்து கடிதம் அல்லது மணி ஆர்டர் அனுப்புங்கள்.

மதுரை உபவாச ஜெபத்தில் கலந்து கொண்ட, ஊழியம் செய்யும் ஒரு அன்புச் சகோதரனும் தாயாரும் அனுப்பிய ஒரு கடிதத்தை அச்சிட்டு ஆசிரியர் கடிதத்தை ஜெபத்துடன் முடிக்கிறேன்.

*22-11-2016*

**கிறிஸ்துவுக்குள் அன்பான ஐயாவுக்கு,**

*தங்களை 19-11-2016 அன்று "எழுப்புதலுக்காக இதய கதறல் - 2016" மூலமாக எங்கள் ஊரில் (மதுரையில்) சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சியடை கிறேன். நீங்கள் நடத்துகிற இக்கூட்டங் கள் யாவும் கர்த்தருடைய வருகைக்கு முன் செய்ய வேண்டுவென எதுவென் பதை எடுத்துக் காட்டுகின்றதாய் இருக் கின்றது. கர்த்தர் தாமே உங்களை இன்னும் அதிகமாய் எடுத்துப் பயன் படுத்த ஜெபிக்கின்றேன்.*

*தங்களுடைய "வருகையின் தூதன்" பத்திரிக்கை ஒழுங்காக கிடைத்து வருகின்றது, நன்றி. அதில் எழுதப் படுகின்ற தேவ வார்த்தைகள் யாவும் எழுப்புதலை மையமாக வைத்தே எழுதப்படுவதால் இதயத்தை தொட்டு, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக உள்ளது.*

This month I just read your "Over which cities do you weep?" This tract is truly having a touchable message. I praise God for this kind of vision is given to you by him and you are having the burdened heart for the people of this nation who goes down without knowing the Love and salvation of our Lord.

I really thank my father Jesus for given you as a spiritual father. On that day I completely melted by your love. Praise the Lord. May the Lord bless you and use you in His kingdom work.

**அன்பு நேசரின் உன்னத பணியில்,**

**சகோ.ஜோனத்தான் நேசன். ஜா.**

××××××××

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

*தேவ கிருபை உங்களோடிருப்பதாக.*

*உங்கள் சகோதரன்,*

*வெஸ்லி தேவதாசன்*

**WESLEY DEVADASON**

*தொலைபேசி: 95432 21008*

*94897 40295*

***10.00 - 1.00; 2.00 - 6.00***

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் நமது வேத சாஸ்திரத்தைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் நாம் அவர்களிடம் பேசும்போது நமது ஆவியைப் புரிந்து கொள்ள முடியும்.

நாம் சொல்லுவதை விட நமது நடக்கை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக் கப்படுகிறது. எனவே பேசுவதின்படி செயல்படாவிட்டால் எந்த பயனு மில்லை. ஆக சமாதானத்தின் சுவிசேஷத் தின் பாதரட்சை என்பது சுவிசேஷம் என்றால் என்ன என்பதை விளக்கவும், நம்மில் சமாதானமாயிருப்பதற்கான ஆவிக் குரிய ஆயத்தமுமாகும்.

**கேடயம்**

வசனம் 16-ல் இது சொல்லப் படுகிறது. ரோமருடைய படையில் இரண்டு விதமான கேடயங்களுண்டு. ஒன்று சிறிய வட்ட வடிவானது. மற்றது முட்டை வடிவில் நீளமாயிருக்கும். இது சரீரத்தின் அனைத்துப் பகுதிகளையும் பாதுகாக்கக் கூடியது.

எதிர்த்து வரும் சாத்தானை நாம் தாக்கும்போது அவன் எதிர் தாக்குதல் நடத்துவான். அவன் நமக்கெதிராக மட்டுமல்ல, நமது வீடு, குடும்பம், தொழில், போன்ற வாழ்வின் பல்வேறு பகுதிகளையும் தாக்குவான். எனவே நமது கேடயம் இவை அனைத்தையும் மூடி பாதுகாக்கக் கூடியதாயிருக்க வேண்டும். விசுவாசம் கேள்வியினாலும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலும் வருவதால் முழுமையான பாதுகாவ லுக்காக வேதவசனத்தை வாசிக்க அதிக சமயம் செலவிட வேண்டும்.

ஊழியக்காரன் அதிகமாக தேவ னால் பயன்படுத்தப்படும் போது சாத்தானும் அவன் மீதும் குடும்பத்தின் மீதும் அதிக அழுத்தத்தைக் கொண்டு வந்து அவனைத் தகுதியற்றவனாக மாற்றுகிறான். எனவேதான் நாம் விசுவாசமாகிய கேடயத்தைப் பிடித்துக் கொண்டு அவருடைய வசனத்தால் நமது வாழ்வின் அனைத்துப் பகுதி களையும் பாதுகாக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

நாம் இந்தக் கேடயத்தை எடுத் துக் கொள்ள வேண்டும். அது தானாக நமது கைகளில் வருவதில்லை. நாம் விசு வாசத்தைப் பிடித்துக் கொண்டு பத்திர மாகவும் உறுதியாகவும் அதைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

**தலைச்சீரா**

இரட்சணியம் என்னும் தலைச் சீரா. இது தலைப்பகுதியைப் பாதுகாக் கின்றது. தலை எதைக் காண்பிக்கிறது? நமது மனம் அல்லது சிந்தனை வாழ்வு எனக் கூறலாம். தேவன் விசேஷித்த பாதுகாவலை நமது உள்ளங்களுக்கும், சிந்தனை வாழ்விற்கும் அளித்திருக் கிறார். அனேக அர்ப்பணமுள்ள தேவ ஊழியக்காரர் தலையில் காயம்பட்டி ருப்பதை நான் கண்டிருக்கிறேன். சாத் தான் நமது உள்ளங்களில், நம்பிக்கை யின்மை, போன்ற ஒரு ஆயுதத்தை பயன்படுத்துகிறான். நாம் மனைவியை அல்லது கணவனை அல்லது உடன் கிறிஸ்தவர்களை அல்லது ஊழியக் காரரை நம்ப மறுக்கிறோம்.

சந்தேகம், பயம், தப்பெண் ணம், மனச் சோர்பு போன்றவைகளும் சாத்தானால் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாகும். அனுபவத்தில் நான் கண்ட ஒன்று சுமார் 20% ஊழியர்களும் மனச்சோர்புக்கு ஆளாகிறார்கள். நான் அனுபவத்திலிருந்து இதைச் சொல்லு கிறேன். நான் இரட்சிக்கப்பட்டு, ஆவி யின் ஸ்நானத்தைப் பெற்று முழு நேர ஊழியத்திற்காக அழைக்கப்பட்டவன். ஆனால் எனக்கு மனசோர்பு என்ற பிரச்சினை இருந்து வந்தது.

எனது போதகப் பணியில் அனேக வெற்றியின் அனுபவங்கள் இருந்தாலும் மனச்சோர்பின் பிரச்சனை

யால் அதிக அவதிப்பட்டேன். அது ஒரு சாம்பல் நிற மேகம் போல வந்து என்னை சூழ்ந்து கொண்டு என்னைக் குடும்பத்திலிருந்தும், பிறரிடமிருந்தும் பிரிப்பதை உணர்ந்தேன். இதற்காக அனேக வேதவசனங்களை நான் பயன் படுத்திப் பார்த்தேன். பழைய மனிதன் சாகவில்லை.

ஒருநாள் ஏசாயா 61:3ஐ வாசித் தேன். ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடை என்ற வார்த் தைகள் "ஒடுங்கின ஆவிதான்" எனது பிரச்சனை என ஆவியானவரால் உணர்த்தப் பட்டேன். இந்த ஆவி சிறுவயதி லிருந்தே என்னில் காணப்பட்டது.

எனது சத்துருவை நான் கண்டு கொண்டேன். அது ஏதோ ஒன்றல்ல, அது ஒரு நபர். 80% வெற்றிப் பாதை கிடைத்து விட்டது. இதை நிறைவேற்ற யோவேல் 2:32 எனக்குத் தேவை. "அப்பொழுது கர்த்தருடைய நாமத் தைத் தொழுது கொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்".

"ஆண்டவரே, ஒடுங்கின ஆவி என்னிலிருப்பதை நீர் எனக்குக் காண் பித்தீர். உம்மை நோக்கிக் கூப்பிடுகிற வர்களை இரட்சிப்பேன் என்ற தமது வாக்கை முன்வைத்து என்னை விடுவிக் கும்படி கேட்கிறேன்" என்று ஜெபித் தேன். விடுதலை கிடைத்தது.

ஆனால் நான் விடுதலை பெற்ற பின்பு தேவன் விடுதலை தந்தாலும் எனது உள்ளத்தை நான் மறுபடியும் போதிக்க வேண்டும் என்று எனக்குக் காண்பித்தார். விடுதலைக்கு முன்பு இதை என்னால் செய்ய முடியவில்லை. மனதை மறுபடியும் கற்பித்து சிந்தனை வகைகளை உருவாக்குவது எனது பொறுப்பு. எனது தனிப்பட்ட கட்டுப் பாடு சீரமைப்பு ஆகியவை அவசியமா யிருந்தது. அது உடனே ஏற்படவில்லை.

இவ்வாறு நான் எனது பிரச்சனை யால் அவதிப்பட்டேன். எனது முக்கிய பெலவீனம் எனது மனதிலிருந்தது. எபேசி.6:17 ஐ வாசித்தேன் "இரட்சண் ணியம் என்னும் தலைச்சீராவை. . . எடுத்துக் கொள்ளுங்கள்". 1தெச.5:8-ல் "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும் இரட்சிப்பின் தலைச்சீராவையும் தரித் துக் கொண்டிருக்கக் கடவோம்" என்பதையும் வாசித்தேன். தேவன் நான் நம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று காண்பித் தார். மனதிற்குப் பாதுகாவல் நம்பிக்கை. வேதவசனம் மூலம் தேவ பிள்ளை களுக்கு சம்பவிப்பவை யாவும் நன்மைக்கே என உணர்ந்தேன்.

என் மனதை மறுகல்வி பெறச் செய்தேன். நம்பிக்கையின் தலைச் சீராவை அணிந்து கொண்டேன்.

**பட்டயம்**

வேத வசனமாகிய ஆவியின் பட்டயம். இது மற்ற ஆயுதங்களைக் காட்டிலும் வேறுபட்டது. அவை யெல்லாம் பாதுகாவலுக்காக பயன் படுத்தப்பட்டன. இதுவோ தாக்குத லுக்காக பயன்படுகிறது.

'வசனம்', 'வார்த்தை' என்பதற்கு கிரேக்க மொழியில் 'லோகோஸ்' என்பது ஆலோசனை, விவாதம், சத்தியத் தைப் புரிந்து கொள்ளுதல் எனப் பொருள் படும். இன்னொன்று 'ரேமா' இதையே பவுல் இங்கு பயன்படுத்து கிறார். 'பேசப்பட்ட வார்த்தை' என்பது இதன் பொருள். எனவே ஆவியின் பட்டயம் என்பது நீங்கள் பேசும்போது மட்டுமே பயன்படும். நீங்கள் பேசாவிட் டால் உங்களிடம் பட்டயமில்லை.

இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டைக் கூறலாம். இயேசு வனாந் தரத்தில் பிசாசினால் சோதிக்கப் பட்டார். அவர் ஒவ்வொரு சோதனையை யும் மேற்கொள்ள, 'இப்படி எழுதியிருக் கிறதே' என்று கூறினார். நாமும் அப்படியே செய்ய வேண்டும். வேத வசனத்தை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். அது படுக்கையருகில் மேசை யில் இருந்தால் மட்டும் போதாது. நாம் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைப் போன்ற வேத வசனத்தைப் பேசும் போது பிசாசு தூரமாகச் சென்று விடுவான்.

ஆறுவிதமான சர்வாயுத வர்க் கத்தை நாம் கற்றுக் கொண்டோம். இவை யாவையும் நாம் தரித்துக் கொண்டால், தீயவனின் தந்திரமான தாக்குதல்களை எதிர்த்து ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெற முடியும்.

## பத்திரிகை செய்திகள்

### இந்திய அஞ்சல் துறை

**அஞ்சல் துறையின் பல்வேறு சேவைகள்**

(தொடர்ச்சி)

**சரக்கு பரிமாற்ற சேவைகளின் சிறப்பு அம்சங்கள்:**

1. சரக்குகள் மற்றும் பன்முக சரக்குகள்.

2. குறிப்பிட்ட நேரத்தில் பட்டுவாடா.

3. சேமிப்பு கிடங்கு வசதி.

4. தங்கள் இருப்பிடத்திலே வந்து பெற்று அனுப்பும் வசதி.

5. தரைவழி, மற்றும் வான்வழி சரக்கு பரிமாற்றம்.

6. சரக்கு பரிமாற்ற ஆயத்த தீர்வுகள்.

7. அனுப்பும் பொருட்களுக்கு காப்பீட்டு வசதி ஆகிய சரக்கு பரிமாற்ற சேவைகள் உள்ளன.

**மின் அஞ்சல்:**

1. இணையதளம், மின் அஞ்சல் வசதி இல்லாதோருக்கு எளிய வசதி.

2. குறைவான கட்டணம்.

3. அடுத்த நொடியே சென்றடையும் வசதி.

4. அச்சடித்தும், கையினால் எழுதியும் செய்திகளை அப்படியே அனுப்பலாம்.

5. முக்கிய நபர்களுக்கு முக்கியமான நாட்களில் வாழ்த்துகள் அனுப்பலாம். இதற்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

**விரைவு பார்சல் அஞ்சல்:**

1. அதிக பட்சம் 35 கிலோ வரை அனுப்பலாம்.

2. எடை மற்றும் தூரத்தின் அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படும்.

3. குறைந்த கட்டணம்.

4. ஒப்பந்த வாடிக்கையாளர்களுக்கு மிகக் குறைந்த கட்டணம்.

5. முதலில் பதிவு செய்து பின்பு கட்டணம் செலுத்தும் வசதி.

6. காப்பீட்டு வசதி.

7. கூடுதல் கட்டணம் எதுவுமின்றி வாடிக்கையாளர்களின் இருப்பிடத்திற்கே வந்து பார்சலை பெற்று செல்லும் வசதி.

8. அனுப்பிய பார்சல் எங்குள்ளது என்பதை இணையதளம் வாயிலாக அறியும் வசதி.

9. அதிக எண்ணிக்கையில் பார்சல் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு கட்டணத்தில் சலுகை உண்டு.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To